DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF PROCEDURE)
IN THE COURT OF DISTRICT MUNSIF, VANIYAMBADI, THIRUPATTUR DISTRICT

| | |
|---|---|
| Name | பழனியம்மாள் |
| Husband's Name | கோவிந்தசாமி |
| Village | வடக்குப்பட்டு |
| Taluk | வாணியம்பாடி |
| Calling | இல்லத்தரசி |
| Age | 65 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1872 on the day of **13.11.2025**

**O.S. No. 92 /2016** **பி.வா.சா.2**

**குறுக்கு விசாரணை**

1. என்னுடைய தகப்பனார் பெயர் முருகன் என்றால் சரிதான். வழக்கின் ஒன்றாம் பிரதிவாதி எனக்கு என்ன உறவு முறை என்றால் என்னுடைய உடன்பிறந்த சகோதரர் ஆவார். நானும் ஒன்றாம் பிரதிவாதி கருண பூபதியும் எனது தகப்பனாரின் முதல் மனைவியின் பிள்ளைகள் என்றால் சரிதான். வழக்கின் வாதி பிரபுவும், பானு என்பவரும் என் தகப்பனாரின் இரண்டாவது மனைவியின் பிள்ளைகள் என்றால் சரிதான்.

2. தாவா சொத்தின் எவ்வளவு மற்றும் அதன் விஸ்தீரணம் எனக்கு தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. வழக்கு சொத்து சம்பந்தமாக வாதியின் பெயரில் என்ன பத்திரம் இருக்கிறது என்று எனக்கு தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. வழக்கு ஒன்றாம் பிரதிவாதிக்கு அவருடைய தகப்பனார் மூலம் எவ்வளவு சொத்து வந்தது என்று ஞாபகம் உள்ளதா என்றால் இல்லை. வழக்கின் வாதி மற்றும் ஒன்றாம் பிரதிவாதியின் பெயரில் உள்ள பத்திரங்களை நான் பார்த்து தெரிந்து கொண்டேனா என்றால் எதுவும் பார்க்கவில்லை.

3. வழக்கு சொத்து அமைந்துள்ள கிராமத்தில் என் தகப்பனார் மூலம் எனக்கு எதுவும் சொத்து வழங்கப்பட்டதா என்றால் இல்லை. நான் தற்போது எங்கு குடியிருக்கிறேன் என்றால் வடக்குப்பட்டு கிராமத்தில். வழக்கு சொத்திற்கும் நான் குடியிருக்கும் பகுதிக்கும் சுமார் 25 கிலோமீட்டர் தூரம் இருக்கும் என்றால் சரிதான்.

என்னுடைய தகப்பனாரும் தாயாரும் தற்போது உயிருடன் இல்லை என்றால் சரிதான். எனக்கு திருமணம் ஆகி சுமார் 50 வருடங்கள் இருக்கும். என்னுடைய தாய் தந்தை இறந்த பின்பு கிராமத்திற்கு நான் சென்று வருகிறேனா என்றால் இல்லை. எனது தாய் தந்தை இறந்து சுமார் 15 முதல் 20 வருடங்கள் இருக்குமா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை.

4. பிரதிவாதிகள் எனக்கு தற்போது வரை சவரச்சனை செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். வழக்கின் ஒன்றாம் பிரதிவாதி கருன பூபதி இறந்துவிட்டார் என்றால் சரிதான். என்னை சாட்சியம் அளிக்க யார் அழைத்தார்கள் என்றால் வழக்கின் இரண்டாம் பிரதிவாதி. வழக்கின் வாதி என்ன பரிகாரம் விவரங்கள் தாக்கல் செய்துள்ளார் என்று நான் படித்து தெரிந்து கொண்டேன் என்றால் இல்லை.

5. வழக்கு சம்பந்தமாக ஏற்பட்ட பிரச்சனை குறித்து போலீஸ் புகார் எதுவும் ஏற்பட்டதா என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். வழக்கு சொத்து குறித்து நீதிமன்ற ஆனையரிடம் அளவீடு செய்தது குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். வழக்கு சொத்தில் குறிப்பாக என்ன பிரச்சனை என்று எனக்கு தெரியுமா என்றால் வண்டி வழி குறித்து பிரச்சினை உள்ளது என்று இரண்டாம் பிரதிவாதி கூறி தெரியும். வழக்கு குறித்து எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றாலும் எனது அண்ணி இரண்டாம் பிரதிவாதி கூறியதின் பெயரில் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரி அல்ல.

குறுக்கு விசாரணை முடிவுற்றது. மறு விசாரணை இல்லை.

DISTRICT MUNSIF
ESHWAR VISWANATHAN
Digitally signed by ESHWAR VISWANATHAN
Location: VANIYAMBADI
Date: 2025.11.21 16:21:21 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாணியம்பாடி.